ஆரம்பிப்பதற்கு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இந்த காலதாமதத்திற்கு காரணம் என்ன? இந்த ஆண்டாவது ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, காரணம் பணம் பற்றாக்குறைதான்.

மின் பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான திட்டம்.

286—*வினா 20474— திரு. சி. கணேசன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருக்க, மாற்று ஏற்பாடுகளுக்கான செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மின்பற்றாக்குறை ஏற்படாவண்ணம் இருப்பதற்காக மின் உற்பத்தியை பெருக்கும்பொருட்டு, கீழ்க்கண்ட திட்டங்கள் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.—

1	வடசென்னை அனல் மின்நிலையம்	5 × 210	மெ.வா.
2	தூத்துக்குடி அனல் மின்நிலைய விரிவாக்கம்.	2 × 210	மெ.வா.
3	நெய்வேலி மூன்றாவது அனல் மின் நிலையம்.	5 × 210	மெ.வா.
4	எரிவாயு மின்திட்டம்.	6 × 50	மெ.வா.

5 இதைத் தவிர, கல்பாக்கம் விரிவாக்கம் மற்றும் இரண்டாவது அனல் மின்நிலையம் போன்ற திட்டங்களை தமிழ்நாட்டில் ஏற்படுத்த மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்துகிறது.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மின்பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்கின்ற முறையிலே வடசென்னை அனல் மின்நிலையம், நெய்வேலி, தூத்துக்குடி போன்ற மின்நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசின் அனுமதி கோரி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாலைகள்

அதிகமாக இருக்கின்ற கோவை போன்ற மாவட்டங்களிலே மின் பற்றாக்குறை அதிகமாக இருப்பதால் தென்னிந்திய மில் முதலாளிகள் சங்கம் தாங்களே தெர்மல் நிலையங்களை அமைத்துக்கொள்வதன் மூலமாக மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஏற்றமுறையிலே அதற்காக அரசிடம் அனுமதி கேட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மை ா? அரசு அனுமதி அளித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. இவைகள் நாமே போட்டிருக்கிற திட்டங்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறையால் அடிக்கடி பஞ்சாலைகளும் தொழிற்சாலைகளும் பாதிக்கப்படுகின்றன. அதைப் போக்குவதற்கு சில ஏற்பாடுகளைச் செய்வதாக அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்பட்டது. அதற்காக மத்திய அரசாங்கம் என்ன பதில் அளித்திருக்கிறது. இருப்பதற்கே ஒரு ஆபத்து வந்திருக்கிறது என்பது உண்மையா? சிங்கரேணியிலிருந்து நிலக்கரி—கட்ட வேண்டிய பணம் கட்டாததால் நிறுத்தி இருப்பதாகவும் நிலக்கரி ஸ்டாக் இல்லாத காரணத்தினால் 5 ஜெனரேட்டர்களுக்கு இப்போது 3 ஜெனரேட்டர்கள்தான் ஓடக்கூடிய நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச.இராமச்சந்திரன்; சிங்கரேணி பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் தரமுடியும். வடசென்னை அனல் மின் நிலையத்தை 210 மெகாவாட் கொண்ட 5 பிரிவுகளாக அமைக்க வேண்டுமென்று நாம் பரிந்துரை செய்தோம். ஆனால் அவர்கள் 210 மெகாவாட் கொண்ட 3 யூனிட்டுகளுக்குத் தேவையான நிலக்கரியைத்தான் தர இயலும் அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். வடசென்னை திட்டம், தூத்துக்குடி அனல் மின்நிலையத் திட்டம் 210 மெகாவாட் கொண்ட 2 யூனிட்டுகள் உள்ள திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களுக்கும் அநேகமாக விரைவிலே மத்திய அரசாங்கம் அனுமதி அளிக்கும் என்று எதிர் பார்க்கிறோம்.

திரு. இல. பலராமன்: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வடசென்னையில் 400 மெகாவாட் என்று கருதுகிறேன், அந்த அளவுக்கு இருந்ததை 510 மெகாவாட்டாக உயர்த்துவதற்கு மத்திய அரசுக்கு கோரிக்கை விட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தூத்துக்குடியிலே 210 மெகாவாட் அளவுக்கு செய்யப்போவதாகச் சொன்னார்கள். ஏற்கனவே இன்றைக்கு இருக்கக்கூடிய கெப்பாசிடி அளவுக்கு மின் உற்பத்தியைச் செய்வதற்கு சில தடைகள் இருக்கின்றனவே, அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? முழு கெப்பாசிடி அளவுக்கு மின் உற்பத்தி இப்போது செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்,

1984 மார்ச் 16]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தூத்துக்குடி அனல் மின் நிலையம் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. எண்ணூர் திட்டமும் பேசின்பிரிட்ஜ் திட்டமும் நமக்கு சிக்கல்களைத் தருகின்றன. அடுத்த கேள்வி அதைப்பற்றி வருவதாலே இதிலே அதைப் பற்றிய பதிலைத் தரவேண்டியதில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு 12 மணி நேரம் மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். 12 மணி நேரம் உண்மையிலே கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆகவே காலையில் 6 மணி நேரமும் மாலையில் 6 மணி நேரமும் மின்சாரம் விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்தைப் பொறுத்தவரையில் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, பகல் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் தரப்படுகிறது. காலையிலிருந்து மாலைவரை தருவது என்பது இயலாது.

அனல் மின் நிலையங்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்கள்.

286— வினா எண் 21289— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் அனல் மின்சார நிலையங்களைச் செப்பனிடத் திட்டம் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) எண்ணூர் அனல் மின் திட்டத்திற்காக ரூ. 41.4 கோடி மதிப்பீட்டில் ஒரு மேம்பாட்டுத் திட்டம் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு இத்தகைய திட்டம் தேவையில்லை.

(இ) 1981-82 ஆம் ஆண்டு ரூ. 6 கோடியாகும்.

1982-83 ஆம் ஆண்டு ரூ. 7 கோடியாகும்.

1983-84 ஆம் ஆண்டு ரூ. 10 கோடியாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS